Registered as a News Paper in Ceylon
P M G. No. H A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருடம் (1889) ஆவணி மாதம் 28 ௳ உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத்-௬௩] யாழ்ப்பாணம்:- கரவருஷ கார்த்திகைமீ ௪ உ செவ்வாய்க்கிழமை (20 நவம்பர் 1951) [இல.-௬௨

## தமிழன் கண்ட ஜப்பான்

சென்னை முன்னாள் மேயர்
**திரு. எஸ். இராமசாமி நாயுடு அவர்கள்**
ஜப்பானிலுள்ள கோப் (Kobe) நகரத்திலிருந்து எழுதியது

தோக்கியோ நகரத்திலிருந்து இந்நகருக்கு வந்து ஆறுநாட்களாகின்றன. ஓஸாகா, கெயற்றோ, நாரா,ஸிவாலேக் முதலிய இடங்கள் யாவும் நன்கு சுற்றிப் பார்த்தேன் இன்னும் இரண்டு வாரங்கள் அளவில் தங்கிச் சிங்கப்பூருக்குப் புறப்படுவதற்கு எண்ணியிருக்கிறேன்.

முத்துக்குமரனின் திருவருளால் செல்லும் இடந்தோறும் வரவேற்புகள் சிறப்புடன் கிடைக்கின்றன. அவனருள் இருக்கும்பொழுது இவ்வாறு இனிய முறையில் நிகழ்வது கண்டெனக்கு வியப்பில்லை. இனி வருங்காலத்தில் இஃதேபோல் இருக்குமாறு அத்திருவருள் துணைபுரிதல் வேண்டும். தோக்கியோவிற்கும் கோப்பிற்கும் 360 மைல் தூரம் உண்டு. வியாழன் 13-9-51 தோக்கியோசெல்லுவேன்.

ஜப்பான் அழகான—அற்புதமான தேசம். இன்று இவர்கள் அமெரிக்க ராணுவ அதிகார ஆட்சியின் கீழ் இருக்கிறார்கள். உழைப்பு மிகுந்தவர்கள். திறமை சாலிகள். நல்லவர்கள். பொறுமையிற் சிறந்தவர்கள். யுத்தம் காரணமாகவே இவர்களுக்கு இழுக்கு ஏற்பட்டது. ஒரு விதத்தில் ஜப்பானியர்களுக்கு யுத்தம் நல்ல பாடமே கற்பித்தது. பொறுமையாக அந்நியருடைய ஆட்சியிலும், தம்முடைய கருத்திலே கண்ணுடையராய் இருந்தமையான், இப்பொழுது சமாதான உடன்படிக்கை நிறைவேறுவதற்குத் துணையாக அமைந்தது. அந்நிய நாட்டவரை இழித்துக் கூறவதிலே ஈடுபடாது அவர்கள்பால் உள்ள அருமைகளையும், பெருமைகளையும், எழிலையும், ஏற்றத்தையும், நன்கு உணர்ந்து, அறிந்து, தொழில் வகைக்குப் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள்.

மலேயாவில் இவர்களுடைய இராணுவ ஆதிக்கம் இருந்த பொழுது, பல்வேறு வகையான வரலாறுகளை கேள்வியுற்றேன். இங்கு வந்து இவர்களைப் பார்த்த பின்னர் வேறு எண்ணம் உண்டாகிறது. சாதாரண மக்களைப் பார்க்கும் பொழுது, வேறுபாடு இல்லாது உயர்வு ஒன்றுதான் காணக் கிடக்கின்றது.

ஜப்பானியர்கள் சிறந்த தேசபக்தி கொண்டவர்கள். இவர்களுக்கு நிகராக எவரையும் ஒப்பிட்டுக் கூறமுடியாது. தேசத்திற்காக உயிரைத் தியாகம் செய்யவேண்டுமென 'மக்கள் தேவை' என்று அரசர் அறிவிப்பாராயின், 'மலை—மலையாக வந்து குவிந்து விடுவார்கள். இவர்களுக்கு உள்ள 'இராஜவிஸ்வாசம்' மிகவும் மகத்தானது. புனிதமானது. உன்னதமானது. உயரியது. போற்றுதற்கு உரியது. இன்றும் அரசர் ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடந்துவருகின்றார்கள். அரசரிடத்தில் காட்டும்மரியாதைக்கு ஓர் எல்லை காணமுடியாது.

கட்டாயக் கல்வி உண்டு. படிக்காத ஆடவரும், பெண்டிரும் இல்லை. யாவரும் படித்தவர்கள். சிறுவர்களாகப் பள்ளியிற் படிக்கும் பொழுது நகரசுத்தி செய்தல் முதலியவற்றைப் பற்றிய பாடங்களைக் கற்பிக்கின்றார்கள். இவ்வாறு இளமையிலே பெறும் கல்வி பெரிதும் பிற்கால வாழ்விற்கு உறுதுணையாக அமைந்து விடுகின்றது.

உயர்வு தாழ்வு இல்லை. எவர் எந்தவேலை வேண்டுமானாலும் செய்யலாம். பிறப்பினால் உயர்வு என்ற பிரிவினை காணமுடியாது. எல்லோரும் ஓர் நிறை, அறிவிற்கே உயர்வு. பணியாட்களையும் மரியாதையாக எல்லோரும் அழைப்பது வழக்கம்.

பதினெட்டு வயதுவந்த பின்னர் மணவினையை விரும்பியவாறு செய்து கொள்ளலாம். இந்த வழியை யுத்தகாலத்திற்குப் பிறகே பின்பற்றுகின்றனர். அதற்கு முன்பு பெற்றோர்களுடைய அநுமதி வேண்டும். ஆயின் அதிசயிக்கத்தக்கதொரு விஷயம் உண்டு. வயது முதிர்ந்தவர்கள்பால் மட்டில்லாத மரியாதை காட்டுகிறார்கள்.

ஒருவருடைய இல்லத்திற்கு நம் போன்றவர்கள் செல்லுவோமாயின் அங்குள்ள பணிப்பெண், முன் வாசலில் வந்து, மண்டியிட்டு வணங்கி வரவேற்று, உள்ளே இட்டுச் செல்லுவாள்.

அடிக்கடி பூகம்பம் நிகழ்வதால் சின்னஞ்சிறு மரவீடுகளில் வசிக்கிறார்கள். அழகாகக் கட்டியிருக்கிறார்கள். மிகவும் சுத்தமாக வைத்திருக்கிறார்கள். பூகம்ப அதிர்ச்சியினால் இடையூறு ஏற்படாவண்ணம் அப்பொழுது ஆராய்ச்சி செய்து, கணக்கற்ற மிகப்பெரிய பிரமாண்டமான கட்டடங்களைப் புத்தம் புதிய வழியில் நிர்மாணித்திருக்கிறார்கள். அமரிக்க "இன்ஜினீயர்" உதவி கொண்டு நிறுவிய கட்டடம் நான் தோக்கியோவில் தங்கியுள்ள விடுதிக்கு அணித்தே உள்ளது. மருண்டுஜி என்ற பெயர். ஏழு அடுக்குகள் வைத்திருக்கிறார்கள். இந்தக் கட்டடத்தில் அமைந்துள்ள, பல அலுவலகங்களில் ஐந்து ஆயிரம் மக்கள் வேலை பார்க்கிறார்கள். நாள் ஒன்றுக்கு லக்ஷம் ஜனங்களுக்குக் குறைவில்லாமல் இதில் வியாபார நிமித்தம் சென்றுவருகிறார்கள். இதைப்போல இன்னும் எத்தனையோ கட்டடங்கள் உள்ளன. புதிய வேறு பல இடங்களிலும் நிர்மாணம் செய்த வண்ணமாக இருக்கின்றனர். இக் கட்டடங்களில் வேலைபார்க்கும் ஆட்கள் குறைவு. யாவும் யந்திரங்கள் பூட்டியே வேலை செய்யப்பெறுகின்றன. பக்கத்துக் கட்டடத்திற்கு எத்தகைய சத்தமும், வேறு இடையூறும் ஏற்படாது. உள்ளே எவ்வாறு கட்டடம் நடைபெறுகின்றது என்பதை வழிப்போக்கரும் அறியமாட்டார்.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

உ

## தோத்திரம்

தனித்திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

ஒன்று வெண்பிறைக் கண்ணிபோர் கோவணம்
ஒன்று வேழுமை யோடு முடித்தது
ஒன்று வெண்டலை யேந்திய முள்ளத்தே
ஒன்றி நின்றங் குறையு மொருவனே.

பத்து நூறவன் வெங்கண்வெள் ளேற்றண்ணல்
பத்து நூறவன் பல்படை தோண்மிசை
பத்தி யாயில மாதவின் ஞானத்தால்
பத்தி யானிடங் கொண்டது பள்ளியே.

— அப்பர் சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்

## இராமநாயக குடும்ப நிதி

உயிர்த் தியாகஞ் செய்த இராமநாயக்கவின் குடும்பசம்ரக்ஷணை நிதி ரூபா 24,000 த்துக்கு மேற்பட்டு விட்டதாம்

பனிப்பிட்டியா புகை வண்டித் தானத்தில் ஆபத்திலகப்பட்ட ஓர் சிறுமியை மீட்கும் பொருட்டுத் தமது உயிரைத் தியாகஞ் செய்த திரு. D. T. இராமநாயக்கவின் குடும்ப சம்ரக்ஷணையின் பொருட்டு "இலங்கா தீப" என்னும் சிங்கள தினசரிப் பத்திரிகையின் வேண்டுகோளின் பேறாக சென்ற ஒருவாரத்துக்குள் ரூபா 24,000 க்கு மேற் சேர்ந்துவிட்டதாம். இந் நிதியை விடப் புறம்பான சகாயங்கள் பலரால் வாக்களிக்கப்பட்டிருக்கின்றன. நீர்கொழும்பிலுள்ள ஓர் அபிமானி திரு. இராமநாயக்கவின் மூத்த மகனின் கல்விச் செலவு முழுவதையும் தாமே பொறுப்பதாக ஏற்றிருக்கின்றனர். ஏனைய ஏழு பிள்ளைகளுக்கும் வேண்டிய புத்தகங்கள் பாடசாலை உபகரணங்கள் முதலியவற்றை இனமாய் உதவுவதாகப் பல வியாபார தாபனங்கள் முன்வந்திருக்கின்றன. புராதன நகரங்களைத் தரிசித்தற்கான சுற்றுப் பிரயாணங்களை ஒழுங்கு செய்து அவற்றின் வருவாயைப் 'பெற்றோல்' செலவு நீங்கலாக இலங்காதீப நிதிக்குச் சேர்ப்பிப்பதாக "மூன்று பஸ் வண்டிச் சமுதாயங்கள்" திட்டஞ் செய்திருக்கின்றன. கொடான்டுவா நகரசபையார் பிரத்தியேகமானவோர் நிதி திரட்டுகின்றனர். வெலிக்கடை மறியற்சாலையி லிருக்கும் ஒரு நிக்கற்ற கைதி தம்வசம் கொடுத்தற்கு ஒன்றுமில்லாமையால் தமது இரத்ததானஞ்செய்து, அதனாற் பெற்ற ரூபா 10 ஐயும் இந்நிதிக் கனுப்பியுள்ளாராம்.

## திருமூலநாயனார் குருபூசை

சென்ற திங்கட்கிழமை 12-11-51 யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாதாவில் ஷ்டிசபையினது சைவாச்சிரம காவலர் மண்டபத்தில் திருமூலநாயனார் குருபூசை நடத்தப் பெற்றது. அன்றிரவு ஸ்ரீநடராசப் பெருமானுக்கு விசேஷ பூசை நடாத்திய பின் ஸ்ரீமத் ந. சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயர் திருமூலநாயனார் என்னும் பொருள் பற்றிப் பிரசங்கம் செய்தார்.

## சாராய விலையேற்றமும் அதன் விளைவும்

விற்பனை நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் குறைந்து விட்டது

குத்தகைகாரரின் பிரலாபம்

அரசாங்கத்தாரால் சாராயவிலை நூற்றுக்கு நூறு உயர்த்தப்பட்ட தினம் முதல் இற்றை வரையில் நாடெங்கணும் சாராய விற்பனை 90 வீதம் குறைந்து விட்டது.

இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள சாராயக் குத்தகைகாரர் 52 பேர் ஒருங்கு சேர்ந்து, மதுபானப்பகுதித் தலைவர் திரு. W. H. மூர் என்பவரைச் சந்தித்து, சாராய விலையேற்றத்தால் தங்களுக்கு நேர்ந்திருக்கும் பெருகஷ்டத்தைவிட்டு முறையிட்டனர். விலையேற்றம் தங்கட்கு மாத்திரமன்றி சாராயத் தொழிலுக்குமே கெடுதியை விளைவிக்குமெனவுங் கூறினர். பின்னர் உள்நாட்டு மந்திரிக்கும் விண்ணப்பித்திருக்கின்றனர். விலை இப்போது உயர்த்தப்பட்டபடியேயிருக்குமெனில் தங்கள் குத்தகைக் கட்டுப்பணத்தைச் செலுத்திக்கொள்ள இயலாத நிலைமை ஏற்படுமெனவும் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

குத்தகைகாரர் வருடந்தோறும் குத்தகைப் பணமாக ஏறக்குறைய 93 இலட்சம் ரூபா அரசாங்கத்துக்குக் கட்டி வருகிறார்களெனவும், விலையேற்றத்தின் நிமித்தம் விற்பனை குறைந்து வருதலால் தாம்இனிமேற் குத்தகை கேட்கமாட்டார்களெனவுங் கூறுகின்றனர். விலை ஏற்றப்பட்டபடியே இருக்குமெனில் அரசாங்கத்துக்கு ரூபா 4,50,00,000 வரையில் நட்டம் உண்டாகுமாம்.

## சமய தீக்ஷை

சென்ற வெள்ளிக்கிழமை 16-11-51 யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை யாதாவில் ஷ்டிசபையினது காவலர் மண்டபத்தில் நீராவியடம் ஸ்ரீமத் க. வைத்தியநாதக் குருக்கள் பள்ளிக்கூடப்பிள்ளைகளுக்கும் பிறருக்கும் சமயதீட்சைசெய்து வைத்தார்கள்.

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ்; கரஹூ கார்த்திகை மீ சஉ செவ்வாய்க்கிழமை

# ஆறுமுக நாவல சற்குரு

"ஆறுமுக நாவல னெனுஞ்சபாப் பிரசங்க சிங்கமிங் கவதரித்த
தாருமறி வார் அவன தறிவொழுக் கங்கல்வி யறிகிலார் யாதும றியார்
ஆறுமுக மொன்றிலேற் கரிவுசிறி தருள்செய்ததேசிகோத் தமனுமிவனே
செந்தமிழின் நூலுரைகள் தந்ததிங் குரைசெயச் சேடனுன் முடிவதாமோ!
நீறுமுக முறுவித் தருங்கண்டி கைக்கலனில் நேயமிகு வீததெங்கணும்
நிகமாக மம்பூசை நிலைநிறீஇ விட்டதிவன் நிமலப்பிர சங்கநிதியே
காறுதனு மாதத்தி னிறபத்து வீறவருள் சாந்தநா யகிசமேத
சந்த்ர மௌலீசனே! ஐந்தொழில் விலாசனே! சந்திரபுர தலவாசனே"

— ஈழமண்டலசதகம்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுக நாவலர் போன்ற பெரியார்கள் சற்சமயமாகிய சைவத்தின்பொருட்டுஞ் செந்தமிழ் மொழியின் பொருட்டும் ஆற்றிய அழிவிலாததொண்டினை நூற்றுக்கணக்கான வருடம் போற்றினும் அவை தெவிட்டா; நாவலப் பெரியார் தம் சமயம் சாதி தேசம் பாஷையென்னு மிவற்றின் பொருட்டு உழைத்த அரும்பெரும் உழைப்புக்கள் அப்பெரியார் காலத்திலேயே நிறைவேறின; அந்த மகான் கொண்ட மேலான நோக்கங்கள் சில அவர் காலத்து நிறைவேறில வெனினும் காலகதியில் நிறைவேறலாயின. இவற்றிற் கெல்லாங் காரணம் நாவலப் பெருந்தகை தம்முடல் பொருள் ஆவியென்னும் மூன்றினையும் மேலே காட்டப்பட்ட கைங்கரியங்கள்பொருட்டு அர்ப்பணஞ் செய்தமையே.

ஆறுமுகநாவலர் தாம் செய்ய நோக்கங் கொண்ட தொண்டுகட்கு, இல்லறத்திற் புகுதல் இடையூறுமென்பதை யுணர்ந்து அதன்கட் புகுதலின்றி நித்தியப் பிரமசாரியாகவிளங்கினர்; சுயநல மென்பதை யறிந்திலர்; அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் என்னு மிந் நான்கும் அறத்தைக் கடைப்பிடித்துச் செய்தற்குப் பெரும் பகையாமென்பதை யுணர்ந்தவராதலின், அவற்றை அறவே யொழித்து ஒழுகினர்.

மேலும்நாவலப்பெரியார் தாம் எதனைப்போதனை செய்து வந்தாரோ அதனைத் தாமே சாதனையுஞ்செய்து வந்தார்; வேதங்கள் சிவாகமங்கள் புராணேதிகாசங்கள் நீதி நூல்களென்னு மிவற்றில் விதிக்கப்பட்டனவற்றை ஆராய்ந்துசெய்துவந்தாரேயொழிய, அவற்றில் விதிக்கப்படாதனவற்றையும், அவற்றோடு முரண்படுவனவற்றையும் நாவலப் பெரியார் ஒருபோதுஞ் செய்யத் தலைப்பட்டிலர்; ரோஜாமலரிலே தமக்குவிருப்பமிருந்தும், அது அழகோடுஞ் சுகந்தத்தோடுங் கூடிய மலரென்பதைக் கண்டும், புஷ்பவிதியென்னுஞ் சிறு நூலில், இறைவனைப் பூசித்தற்குஞ் சாத்துதற்குமுரியன என விதிக்கப்பட்ட மலரில் இந்த ரோஜா மலர் சொல்லப்படாமையின் தாம் அச்சிறு நூலில் அதனைச் சேர்க்க மறுத்துவிட்டாரென நாவலரையா வுடைய மாணுக்கர் சொல்லக் கேட்டுள்ளோம்.

இப்படியான தெளிவோடும் திடசித்தத்தோடும் நியதியோடும் ஒழுக்கத்தோடும் நம்பிக்கையோடுங்கூடிய நாவலப் பெரியாரைப் பின்பற்றி, பிரபஞ்சத்திற் கட்டுண்டு கிடக்கும் மக்கள் சமயத் தொண்டு மொழித்தொண்டு தேசத் தொண்டு முதலியவற்றைச்செய்யத் துணிதல், "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி, தானுமதுவாகப் பாவித்துத் - தானுந் தன், பொல்லாச் சிறகைவிரித்தாடினாற்போலும்" என்றபடி முடியுமன்றோ!

நாவலரவர்கள் இறைவனிடத்தே பயபக்திபூண்டு அவனருளைக்கொண்டு தூயதொண்டுசெய்யத் தலைப்பட்டாரேயொழிய, மனிதருக்கும் அதிகாரத்திற்கும் பயந்து பொருளுக்காசைப்பட்டுத் தொண்டாற்றத் துணிந்தாரல்லர்; ஒருவனுக்குத் தெய்வத்தின்மீதுள்ள பயபத்தி அதிகப்பட அதிகப்பட, அவன், மக்களுக்கும் அதிகாரத்திற்கும் அஞ்சுமியல்பு தேய்ந்தொழியுமென்னுங் கருத்தமைய நாவலப் பெரியார் கூறியுள்ளார்; "அஞ்சுவது யாதொன்று மில்லை, அஞ்ச வருவதுமில்லை" என்னும் அருள் வாக்கும் இக்கருத்துப் பற்றியதேயாகும்.

இக்காலத்துப் பல்லாற்றானும் தேய்ந்து விபரீதப்பட்டுவருஞ் சைவசமயம் செந்தமிழ் மொழியென்னு மிவைகளைத் தொன்மைபோற் சீர்ப்படுத்துவதற்கு இன்னுமொரு நாவலர் எக்காலத்து உதிப்பாரோ யாமறியேம்!

நாவலரவர்கள் குருபூசைத் தினம் வருகிற வியாழக்கிழமை (22-11-51) நிகழும்; இந்த விசேடதினத்தில், நாவலப்பெரியார் செய்த செயற்கருஞ்செயல்களையும் அவர்வாழ்ந்த மேலான வாழ்க்கையையும் அறிஞர்களாயுள்ளவர்கள் நாடெங்கும் எடுத்துச் சொல்ல வேண்டும்; நாவலர் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் தமிழ் ஆங்கில நூல்களை நன்கு படித்து மனத்திற் பதியச்செய்தல் வேண்டும்.

# உலகம்பலவிதக்கதை

(முற்றொடர் — 30)

### "நல்வரவாகுக"

பத்மநாதன், கமலாட்சி ராதா என்னும் மூவரும் பல விஷயங்களைப் பற்றிக் கலந்து பேசினார்கள்; ஆனால் விவாக விஷயமாக எவரும் ஏதும் பேசிலர்; அங்குள்ள சுயம்பாகி ஏதோ இடை நேரத்திற்குரிய சிற்றுண்டியும் பானீயமுங் கொண்டு வந்து மூவருக்கும் பரிமாற மூவரும் ஒருங்கிருந்தருந்தினர்; அன்பர்கள் சம்பாஷணைப்போதில் நேரம் விரைவிற் கழிதல்போலத் தோன்றும்; பொழுதுபட்டு ஆறரை மணியாய் விட்டது; மோட்டாரும் வந்து நிற்கும் அரவங்கேட்டது; ராதா தனது வாசஸ்தானத்திற்குப் போதற்குப் பத்மநாதன் கமலாட்சி யிருவரிடத்தும் விடை கேட்டாள்; "இன்னும் உங்களுடனிருந்து பேசுதற்கு எனக்குப் பிரியந்தான்; ஆனால் இருண்டு விட்டது; இரதத்திலானாலும் இராக்காலத்தில் தனியேபோகக் கூச்சமாயிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டு புறப்படும்போது, கமலாட்சி "தங்காய் ராதா, உங்கள் வாசஸ்தானத்திற்கு இப்பொழுது அண்ணருடன் நானும் வந்து, பின் இந்த ரதத்திற்றானே சற்று நேரத்தில் மீண்டுவரலாமா" என்று கேட்க, "ஆம், அக்கா, நான் முறையும் என்னுடன் வரலாம்; பின் மீண்டு இங்கே வரலாம்; நானே, சற்று முந்திக கேட்க விரும்பினேன்; நீங்கள் என்னிடத்திற்கு வர இசைவீர்களோ, அல்லவோ என்ற சந்தேகத்தினாற் கேளாதொழிந்தேன்; வாருங்கள், என்னுடன் புறப்படுங்கள்; உங்கள் வரவு நல்வரவாகுக" என்று ஆர்வம் பெருகச் சொன்னாள் இராதா. உடனே இருவரும் புறப்பட்டனர்; ராதாவுடன் அவள் வாசஸ்தானத்தை யடைந்தனர்; அங்கே ராதாவிற்குத் துணையாக அவளுடைய தாயும், ராதாவின் தம்பியும், ஒரு பணிப்பெண்ணும் இருந்தார்கள்; ராதாவினுடைய தாயின் பெயர் நல்லமுத்தம்மை; பழைய கொள்கைகளைப் பூண்ட கிழவி; வயசு அறுபது அறுபத்தைந்து வரையில் மதிக்கலாம்; ராதாவின் தம்பி பெயர் தங்கவடிவேலன்; பட்டினத்திலுள்ள கல்லூரியொன்றில் உயர்தர வகுப்பிற் படிப்பவன்; தமக்கையுடன் விடுதி விட்டுக்கொண்டும், சகோதரங்களைக் கேட்டுப் படித்துக்கொண்டுமிருந்தான்; ராதாவின் தகப்பனார் கதிரவேற்பிள்ளை, பெருந்தனவந்தர், நிலம் புலமுடையவர்; தம்முடைய சொந்தக் கிராமத்திலேயே வசிப்பவர். அவரும் அவர் மனைவியாகிய நல்லமுத்தம்மையும் மாறிமாறிப் பட்டினத்துள்ள தங்கள் மக்களின் வாசஸ்தானத்திற்கு வந்து வந்து போவதுண்டு.

### "வேலாயுத உடையார் சந்ததி"

"பொழுதுபட்டு இருண்டுவிட்டதே, இன்னமும் மகளைக் காணவில்லையே" என்று சற்று ஆவலோடு வரவெதிர் பார்த்தவண்ணமிருந்த கிழவி, மகளோடு இன்னுமிருவர் உடன்வந்து ரதத்திலிருந்து இறங்குவதைக்கண்டு மகிழ்ச்சியடைந்தாள்; பத்மநாதனைக் கிழவி முந்தியே யறிவாள்; கமலாட்சியை முன்னொருபோதும் அறியாள்; பெருந்தன்மையுள்ளவர்கள், விருந்தினரை உபசரிக்கும் இயல்பூண்டவர்கள். தம்மிடம் வந்தவரை முந்தியறிந்திருந்தாலென்ன, அறியாதிருந்தாலென்ன தொன்மை பாராட்டி இன்சொற் கூறி உபசரிப்பது வழக்கமல்லவா! கிழவி அவ்விருவரையும் இன்சொற் கூறியுபசரித்து அழைத்துக்கொண்டு போய்த் தலைவாசலிற் பத்மநாதனை ஒரு நாற்காலியில் இருக்கச்செய்து, அயலிலிருந்த ஒரு "ஸோபா" விற் கமலாட்சியை இருத்தித் தானும் பக்கலிலிருந்து அவளுடைய தலை தொடக்கம் அடிவரையில் ஆர்வத்துடன் பார்த்தாள்; பக்கலில் வந்து நின்ற ராதாவைப் பார்த்து "ராதா, இந்தப்பிள்ளை இன்னாரென்று எனக்குச் சொல்லவொண்ணாதா" என்று ஆசையுடன் கேட்க, "அம்மா, இந்த அக்கா இவருடைய தங்கைச்சி, இங்கு வரும்படி நான் அழைத்துக்கொண்டுவந்தேன்" எனலும், கிழவி கமலாட்சியின் முதுகைத் தடவி "சந்தோஷம், பெயரென்ன" என்று சொல்லி வினவுதலும் "கமலாட்சி" என்று மகள் சொல்ல, கிழவி மகளைப் பார்த்து "மகளே, உனக்கும் இந்தப்பிள்ளைக்குமிடையே எனக்கு ஒரு வித்தியாசமுந் தோன்றவில்லை; நீதான் இவள், இவள்தானீ" என்று அன்புடன் சொல்லித் தன் மகளையும் மற்றப் பக்கத்தில் இருக்கச் செய்தாள். "இன்றைக்கு என்ன கிழமை? சனிக்கிழமை" என நல்லமுத்து தானே கேள்வி கேட்டுப் பதிலுஞ் சொல்லிவிட்டு, தம்பி, நீங்களிரண்டுபேரும் இன்றிரவு ஆகாரம் இங்கே எங்களுடன் முடித்துக்கொண்டு 8 மணி வரையிற்போகலாம்" என்றுசொல்ல, பத்மநாதன் கமலாவின் முகத்தைப் பார்க்க, கமலா உடன்பாடாகத் தலையசைத்தாள். இதற்கிடையிற் கிழவி தாகத்திற்கு ஏதுங் கொண்டு வரும்படி அங்குள்ள பணிப்பெண்ணுக்குச் சொல்ல, "அம்மா, நாங்களெல்லாம் இப்பொழுது தான் ஏதோ ஆகாரஞ் செய்துவிட்டு வந்தோம்; இவர்களை நெருக்காதீர்கள்" என்று தடுத்துச் சொல்ல, கிழவி "அப்படியானாற்சரி" என்று திருப்தியோடிருந்தாள்; இருந்த நல்லமுத்தம்மை கமலாட்சியைப் பார்த்து "உங்கள் சொந்தவூர் எது மகளே," என்று வினவ, இணுவிலென்று கமலாட்சி சொன்னாள்; ஊரைச் சொன்னவுடனே கிழவியின் அகத்தில் ஆர்வமும் முகத்தில் மகிழ்ச்சியும் புலப்பட, "அந்தவூரில் எந்தப்பகுதி" என்று ஆவலுடன் கிழவி கேட்க, "நாங்கள் வேலாயுத உடையார் சந்ததி என்று எங்கள் தகப்பனார் சொல்வதுண்டு" என்றாள் கமலாட்சி; "மகளே, கேட்கிறேன் என்று குறையெண்ணாதே, உங்கள் அப்பர் பெயரென்ன" என்று கிழவியார் கேட்க, தகப்பன் பெயரைச் சொன்னாள் கமலா; "அவருக்கு நீங்களிருவருந்தானா பிள்ளைகள்" என்று கேட்க, "இவர் என் உடன்பிறந்த அண்ணரல்லர்; என் பெரிய தகப்பனாருடைய மகன், எனக்கு அண்ணர்முறையுண்டவர்" என்று சொல்லிப் பத்மநாதனுடைய தகப்பன் பெயரையுஞ் சொன்னாள் கமலாட்சி; இவற்றையெல்லாங் கேட்டபின் வெகு நேரம் யோசித்தாள் நல்லமுத்தம்மை.

### "நீங்கள்வரச் சம்மதித்தது நாங்கள் செய்த பாக்கியம்"

நல்லமுத்தம்மை ராதா என்னுமிவர்களின் கேள்விக்கிசைந்து பத்மநாதனும் கமலாட்சியும் அங்கு உடனிருந்து இராப்போசனஞ் செய்தார்கள்; மோட்டாரச் சாரதிக்கும் ஆகாரம் வழங்கப்பட்டது; நேரமும் எட்டரைவரையாயிற்று; இதற்கிடையில், ராதா தன் தாயைப் பார்த்து "அம்மா, இந்த அக்காவின் சொந்தவூருக்கு ஒரு முறை நான் போக விரும்புகிறேன்; நீங்களும் எனக்குத் துணையாக வருவீர்களா"

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## உலகம் பலவிதக்கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

என்று இதமாகக் கேட்க, "நான் மனத்தில் இப்பொழுது எண்ணியதையே மகளே, நீயும் என்னிடங் கேட்கின்றாய்; ஒரு முறை இவர்களிருக்குமூருக்கு இருவரும் போய் வருவோம்; இதற்கிடையில் எங்கள் சோக்கத்தை உங்கள் தகப்பனுருக்கு எழுதி அவருடைய சம்மதத்தையும் பெறவேண்டுமல்லவா? மகளே, இன்றிரவே அவருக்கு இந்த விஷயமாக ஒரு கடிதம் எழுது" என்று நல்லமுத்தம்மை கவின்றான்; இப்படித் தாயும் மகளும் பேசக்கேட்ட கமலாட்சி பெரும் ஆநந்தமடைந்தாள்; பத்மநாதன் மழையொழுக்கையைந்தற்கு வைத்த பாத்திரம்போற் சிந்தனையோடு அசைவற்றிருந்தான்; கமலாட்சி ராதாவையும் தாயையும் இனிது நோக்கி "நீங்கள் எப்போது எங்களூருக்கு வர உத்தேசித்திருக்கிறீர்கள்" என்று ஆர்வம் பெருக வினவ, "வருகிற வெள்ளிக்கிழமை எங்கள் கல்லூரியில் விடுமுறைநாளாகும்; ஆதலால் முதனுள் மாலைப்புகையிரதத்திற் புறப்பட்டால், வெள்ளிக்கிழமை அதிகாலையில் உங்களிடம் வந்துசேரலாம்" என ராதா சொல்ல, தாயும் "அப்படிச் செய்வதுதான் நல்லது, வேணுமானுல் இரண்டொருநாள் உங்கள் வீட்டிலே நாங்கள் தங்கியும் வரலாகும், சம்மதந்தானே" என்றாள்; "சம்மதந்தானே என்று கேட்கவும் வேண்டுமோ! நீங்கள் எங்களிடம்வரச்சம்மதித்தது நாங்கள்செய்த பாக்கியம்" என்று மகிழ்ச்சியோடு சொன்னாள் கமலாட்சி சற்றுநேரஞ்செல்ல, பத்மநாதன் கமலாட்சியாகிய இருவரும் ராதாவிடத்துந் தாயிடத்தும் விடைபெற்றுக்கொண்டு தங்கள் வாசஸ்தானத்தில் வந்து சேர்ந்தார்கள்; அடுத்த நாள் மாலை கமலாட்சி தன் வேலைக்காரியுடன் புகைரதமூலமாகப் புறப்பட்டுத் தங்கள் ஊருக்கு மீண்டாள்.

(வரும்)

## ஆறுமுக நாவலர் குருபூசை

நிகழும் கரஹூ கார்த்திகைமீ ௪ ௨ (22-11-51) வியாழக்கிழமை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை யாதரவில் டிை சபையினது சைவாச்சிரம நாவலர் மண்டபத்தில் ஆறுமுகநாவலர் குருபூசை கீழ்க்காணும் கிரமப்படி நடைபெறும்.

நிகழ்ச்சிமுறை

முற்பகல் 9 மணி — 2 மணி வரை சடவுளாராதனை, தமிழ்மறையோதல், ஆறுமுக நாவலர் சரித்திரம் படித்தல் (சில பாகங்கள்) மாகேசுரபூசை.

மாலை 6 மணி — 9 மணி வரை டிை சபைத்தலைவர் திரு. இ. சிவகுருநாதர் அவர்கள் தலைமையில் 'ஆறுமுக நாவலர்' என்னும் பொருள்பற்றிப் பிரசங்கம்.

1. மாணவர் இருவர்
2. திரு. அ. அருளம்பலம்
3. திரு. மா. மகாதேவன் B.A (Hons)
4. பிரம்மஸ்ரீ வை. ஆத்மநாதசர்மா.

சைவாபிமானிகள் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்.

சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம்,
17-11-51.

M. 137 20—11—51.

## அரசினர் சீமெந்துத் தொழிற்சாலை

காங்கேசன்துறை

1951 கார்த்திகை மாசம் 15-ந் திகதி தொடக்கம் காங்கேசன் சீமெந்து ஒரு தொன் அடங்கிய 20 (இருபது) பைகற்றுகள் ரூபாய் 160/= விகிதம் விற்கப்படும். பணம் அந்த விகிதமே கட்டவேண்டும்.

R. C. மல்கோத்திரா
ஜெனரல் மனேஜர்
சீமெந்து, 15—11—51.

G. 43 21—11—51

## இந்து ஆலய பரிபாலனத் திட்டம்

### இந்து மகாநாட்டுத் தூதுக் கோஷ்டி உள்நாட்டுமந்திரியைச் சந்தித்தமை

சென்ற சனிக்கிழமை (17-11-51) காலை 9½ மணி வரையில், அகில இலங்கை இந்து மகாநாட்டாரால் அனுப்பப்பட்டதும், திரு. A. சோமசுந்தரம் (O. B. E.) என்பவரைத் தலைமையாகக் கொண்டதுமாகிய ஒரு தூதுக்கோஷ்டி உள்நாட்டு மந்திரியாகிய திரு. ஒலிவர் குணதிலககையைச் சந்தித்து மேற்படி ஆலய சம்பந்தமான சாதனத்தைச் சமர்ப்பித்தனர்.

அங்ஙனம் சமர்ப்பிக்கும்போது குறித்த ஆலயப் பரிபாலனத் திட்டத்திற்கு மாறாய் நிற்பவர்கள் கோயில் ஆதீன கர்த்தர்களாகிய சிலரும் குருக்கண்மாரும் மாத்திரந்தாம் எனவும், அவர்கள் அப்படி மாறாய் நிற்பதற்குக் காரணம் வெளிப்படை எனவும், இந்து சமூகத்தில் அவர்கள் பெருந்தொகையினர் அல்லர் எனவும், மேற்படி மந்திரிக்குக் குறித்த கோஷ்டியார் எடுத்து விளக்கினர்.

கொக்குவில் இந்துக் கல்லூரித் தலைமை ஆசிரியராகிய திரு, S. H. பேரின்பநாயகம் தலைமையிற்சென்ற சாந்தி சேவா சங்கத்தினரும் மேற்படி உள்நாட்டு மந்திரியைச் சந்தித்து இந்த ஆலயப் பரிபாலனத் திட்ட விஷயமாகத் தங்களபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். இந்துக்கோவில்கள் மாத்திரமல்லாமற் கிறீஸ்த ஆலயங்களும், பள்ளிவாசல்களும் இன்னும் வணக்கத்திற்காகிய எவையும், பிழைகள் நேராவண்ணம் அரசினராற் பாதுகாக்கப்படவேண்டு மெனவும மேற்படி சேவா சங்கத்தார் தெரிவித்தனர். அவற்றை யெல்லாங் கேட்ட உள்நாட்டு மந்திரி குறித்த திட்டம் அடுத்த மாசம் வெளிவரும் அரசாங்க 'கெசற்' பத்திரிகையில் வெளியிடப்படு மெனவும், அதன்பின் விரைவிற் பாராளுமன்றத்தில் எடுத்தாளப்படுமெனவுந் தெரிவித்தார்.

உள்நாட்டு மந்திரியைத் தரிசிக்கச் சென்றவர்களின் பெயர் வருமாறு:—

திருவாளர்கள் A. சோமசுந்தரம், A. செல்லமுத்து, A, முத்துத்தம்பி, C. K. சுவாமிநாதன், V. காசலிங்கம், A. அருளம்பலம், K. நடராத்தினம், A. தில்லையம்பலம், S. இரத்தினசிங்கம், பண்டிதர்கள் A. சரவணமுத்து, A. துரைசிங்கம், M. செல்லையா, டக்டர்கள் A. சிசுவலிங்கம், A. சின்னத்தம்பி, C. குருசாமி, முதலியார் S சின்னத்தம்பி, திரு. கா. சண்முகம் என்னுமிவர்களாவர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 532/c

சுந்தரம் அல்லது வேதநாயகம் கைம்பெண் பொன்னம்மா உடுவில்

தத்துவகாரி.

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 532/c தத்துவவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் நாலுதுண்டுக் காணிகள் 1951-ம் ஆண்டு மார்கழி மீ 22-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்த அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

1 உடுவிலில் கொட்டையடி என்னும் காணி நில இலா 9⅞ வீடும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு K. சுந்தரத்தின் ஆதனமும் ராமலிங்கத்தின் உருத்தாளரும்; வடக்கு முருகன் கைம்பெண் தெய்வியும் மறு பேரும், மேற்கு K. சுந்தரத்தினுசனமும், தெற்கு சின்னவன் வல்லியும் T. அப்பையாவும்.

2 உடுவிலில் கொட்டையடி என்னும் காணி நில இலா 7 அதற்குச் சேர்ந்தவைகளும் எல்லை, கிழக்கு K. சுந்தரத்தினுசனம், வடக்கு வகையொழுங்கையும், ஒழுங்கை முகப்பும், மேற்கு வேலுப்பிள்ளை கைம்பெண் பூரணமும் மறுபேரும், தெற்கு சின்னவன் ஆறுமுகத்தின் ஆதனம்.

3 மேற்படி கொட்டையடி என்னும் காணி நில இலா 5 கிழக்கு எல்லைக்காணியிலிருக்கும் கிணற்றுப்பங்கும் எல்லை கிழக்கு K சுந்தரத்தின் ஆதனம், வடக்கு வகை ஒழுங்கையும் முருகன் கைம்பெண் சதிரியின ஆதனமும், மேற்கு K சுந்தரமும், தெற்கு S வல்லியும் வழி வாய்க்காலும்.

4. மேற்படி நீலாசன் ஓடை என்னும் காணி நிஇ 5 வீடுகளும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு A. சீமானின் ஆதனம், வடக்குN. ராமலிங்கத்தின் உருத்தாளியின் ஆதனம், மேற்கு K. சுந்தரத்தின் ஆதனமும் வயித்தி கணபதியும், தெற்கு, ஒழுங்கை.

V. A. Durayappah,
Jaffna, Commissioner.
10-11-51.

M. 140 20—11—51.

## சுயபாஷைகளிற் சுருக்கெழுத்துப் பயிற்சி

அரசாங்கபாஷைவிசாரணைச்சபையாரின் அபிப்பிராயப்படி சுயபாஷைகளை அரசாங்க பாஷைகளாக நடைமுறைக்குக் கொண்டு வருவதில், முதற்படியாகச் சிங்களத்திலும் தமிழிலும் ஒரு பெருந் தொகையினருக்குச் சுருக்கெழுத்துப் பயிற்சி கொடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. இங்ஙனம் பயிற்சி கொடுத்தாலன்றிச் சுயபாஷைகளை உபயோகித்தல் அனுகூலமாகாதென அரசாங்கம் கருதுகிறது. இலங்கை வாலிபரைச் சுருக்கெழுத்திலும் எழுத்துப் பதித்தலிலும் (short-hand and typewriting) பயிற்றுதற்கு தக்க நிபுணரை ஏற்படுத்த வேண்டுமென உத்தேசிக்கப்படுகிறது. அரசாங்க விவகாரங்களில் உபயோகிக்கப்படும் சொற்களையுஞ் சொற்றொடர்களையும் ஆராய்ந்து அட்டவணைப்படுத்துவதற்குச் சில ஆராய்ச்சி உத்தியோகத்தரை நியமிக்கவேண்டுமெனவும், அங்ஙனம் ஆயத்தஞ் செய்யப்பட்ட அட்டவணை, அறிவிற்சிறந்த சில பரிசோதகர்களால் மேலும் ஆராயப்பட்டு அரசாங்கபாஷை விசாரணைச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டுமெனவும் ஆலோசிக்கப்படுகிறது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் அராலி கிழக்கு மூத்துக்குமாரு சபாபதேசு. வழக்காளி

இல. 6035

எதிராக

வண்ணார்பண்ணை கிழக்கு நாவலர் ரோட்டு சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 6035-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1951 ம் ஆண்டு டிசெம்பர் (மார்கழி) மாதம் 17 ந் திகதி (17-12-51) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 7738-ம் இதில் ரூபாய் 7000 க்கு 21-10-49 திகதி தொடக்கம் 18-11-49 திகதி வரைக்கும் 100க்கு 10 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை "மாவடியும் இலகடியும் சம்புகாதன் தறையும்" நிலப்பரப்பு மூன்று (3ம்) குளி 16⅛ ம் கல்வீடும் குளியும் மற்றும் பயிர்களும் எல்லை கிழக்கு செல்லம் துரையப்பாவின் ஆதனம், வடக்கு ரோட்டு மேற்கு முருகேசு நாகலிங்கத்தின் ஆதனம், தெற்கு முருகேசு நாகலிங்கத்தின் ஆதனம்; இதடங்கலும் இன்னும் மேற்கெல்லைக் காணியின் மேற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் அரைவாசிப் பங்கும் 1⅞ குளி அகலமுள்ள வழி வாய்க்கால்பாவிப்புரித்தும். இது 1915ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15-ந் திகதி பிரசித்த நொத்தாரிஸ் எஸ். கே. ஆபிரகாம் முகதாவில் 8103 ம் இலக்கத்தில் எலிசபெத் சேசம்மா பேருக்கு முடிக்கதேன உறுதியில் "A" படம் அனைத்திருக்கிறது. முற்பதிவு D 128/12.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை

Commissioner & Licensed Auctioner

தெல்லிப்பழை

10—11—51

M 139 20-11-51

## வானவில்

கலாமந்திரன்

○ மாத்தறையிலிருந்து மூன்று மைல்தூரத்திலுள்ள கட்புகம என்னுங்கிராமத்தில் வசித்த கிடிறிக் எனப்படும் 65. வயசு வரையுள்ள ஒருவன் தன் மனைவியாளோடு பிணக்குற்று, அவளைக் கத்தியால் வெட்டிக்கொன்றுவிட்டுத்தானும்உடனே கிணற்றுட் குதித்து மாண்டானும்,

○ நந்தாவதியென்னும் 13 வயசுச் சிறுமி அவளுடைய தம்பியாகிய சோமதாஸ் என்னும் 7 வயசுச் சிறுவனுடன் தங்கள் வீட்டிற்கு மீண்டு வருகையில், பித்தியாகல என்னுமிடத்தில் வெர்தோட்டைநதியைக் கடக்கும்போது கால் தவறி ஆற்றுள் வீழ்ந்து போய்விட்டாள்; ஆனல் வீட்டிற்கு மீண்டுவந்த தம்பி தன் தமக்கைக்கு நேர்ந்த செய்தியை உடனே பெற்றாருக்குத் தெரிவித்திலன்; பெற்றார் "அக்காள் எங்கே" என்று சற்றுநேரஞ் செல்ல வினவியபோது சிறுவன் விஷயத்தை மெல்ல மெல்லச் சொன்னான்; உடனே பெற்றாரும் பொலிசாரும் குறித்த இடத்திற்குஓடிப்போயினர், பொலிசர் இருமுறை மும்முறை சுழியோடிச் சிறுமியின் பிரேதத்தைத் தேடினர்; அகப்படவில்லை; சிறுமி முதலைவாய்ப்பட்டிருக்கலாமெனச் சந்தேகப்படுகின்றனராம்.

○ "இந்தக் காலத்திலே யுவரும் யுவதிகளும், இவர்களுள்ளும் பள்ளிக்கூடச் சிறுவர் சிறுமியர் நச்சுத் திராவகம் முதலியவற்றை உட்கொண்டு தம்முயிர் மாய்த்தலைக் காண்பது பெரிதும் அஞ்சத் தக்கது" என்று கொழும்பு நகர்ப் பிரேத விசாரணை யதிகாரியும் நீதிபதியுமாகவுள்ள திரு. J. N. C. திருச்செல்வம், சென்றவாரம் வெள்ளவத்தையில் புகைரத தண்டவாளத்தின்மீது கிடந்து புகைரதத்தாலகப்பட்டு மாண்ட 18 வயசு வாலிபனுகிய ஐயசேனு என்பவனது பிரேதபரிசோதனைப் போது கூறினர்.

## மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீட்சைகள்

மேற்படி சங்க மனேஜராகிய திரு. S சிவஸ்வாமி பின்வருமாறு தெரிவிக்கிறார்:-

இம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் நிகழும் கர வருஷ பங்குனி மீ 4, 5, 6, 7 (1952 - ஆம் வருஷ மார்ச்சு-மீ 17, 18, 19, 20) தேதிகளில் நடத்தப்பெறும் தனித்தமிழ்ப் பரீக்ஷைகளுக்கு வரும் மாணவர்கள் கர-வருஷ தை-மீ 15-உ (28-1-'52)க்குள் விண்ணப்பப் பாரத்தையும் பரீக்ஷைக் கட்டணத் தொகையையும் இச்சங்க ஆபீசு மானேஜருக்கு அனுப்பவேண்டுமென்றும், மேலே குறிப்பிட்ட தேதிக்குப் பின்பு வரவாகும் யாவும் அங்கீகரிக்கப்படமாட்டாவென்றும் இதன்மூலம் அறிவிக்கலாயிற்று. பரீக்ஷைக் கட்டணத் தொகை மணியார்டர் மூலமே அனுப்பப்பட வேண்டும். வேறுவிதமாக அனுப்பினால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தனித்தமிழ்ப் பரீக்ஷை சம்பந்தமான விதிகள் பாடங்கள் கட்டணத்தொகை முதலிய விவரங்களடங்கிய அச்சுப்பத்திரிகை தேவையாகில் இந்தியாவில் வசிப்போர் இரண்டணா இந்தியத் தபால்தலையும் ஸிலோன் முதலிய வெளிநாட்டினர் ஆறு அணா மணியார்டரும் சங்க ஆபிசிற்கு அனுப்பிப் பெறலாம்.

## இலங்கை வர்த்தக லாபம்

இவ்வாண்டின் முதற்பத்து மாதங்களிலும் இலங்கையின் வர்த்தக இலாபம் 28½ கோடி ரூபாவென மதிப்பிடப்படுகிறது.

இவ்வாண்டின் முதற்பத்து மாதங்களிலும் இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களின் பெறுமதி ரூபா 154,79,98, 741 எனவும், இறக்குமதிப்பொருள்களின் பெறுமதி ரூபா 132,94,81, 662 எனவும் மொத்த இலாபம் ரூபா 285,000,000 எனவும் துறைமுகப்பகுதியாரால் கணிக்கப்பட்ட புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. சென்ற வருடத்தில் இதே மாதங்களுக்குரிய ஏற்றுமதிப் பொருள்களின் பெறுமதி ரூபா 116,86, 33, 754 எனவும் இறக்குமதிப் பெறுமதி ரூபா 97,43,52, 543 எனவுங் காணப்படுகின்றன. இலங்கையுடன் வர்த்தகத் தொடர்புற்றிருக்கும் நாடுகளுள், பிருத்தானியாவே முதலிடம் பெற்றிருக்கிறது. யப்பான், பேர்மா, அமெரிக்காவாகிய நாடுகள் பிருத்தானியாவுக்கு அடுத்து நிற்கின்றனவென அறிக்கை காட்டுகின்றது. யப்பானின் இலங்கை வர்த்தகம் இவ்வாண்டில் அதிகரித்திருக்கிறதெனவும், பேர்மாவுக்கு ஏனைய தேசங்களைவிட அரிசியின் பொருட்டு அதிக பணம் அனுப்பப்பட்டதெனவும் அமெரிக்கா அதிகமான கொள்வனவுகாரத் தேசமாயிருக்கிறதெனவும் குறித்த அறிக்கை வெளிப்படுத்துகின்றது.

## சிரேஷ்ட உதவி வித்தியாதிபதி

பகிரங்கசேவைக்கொமிஷன், திரு. எஸ். பி. சற்குணனை உதவி வித்தியாதிபதியாக 1950-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4-ந் திகதி தொடக்கம் நியமித்திருக்கின்றது. சென்ற மாதத்திலிருந்து இவர் சிரேஷ்ட உதவி வித்தியாதிபதியாகக் கடமை புரிகின்றனர். இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட மூன்றாவது தமிழன் இவரே. காலஞ்சென்ற திரு. டபிள்யு. ஆர். டவாற்சனும், திரு. கே. எஸ். அருணந்தியுமே இவருக்கு முன்னர் இப்பதவியை வகித்த தமிழர். —சுடிதா.


# சாலாமிஸ்ரி லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக்குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். தேகபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50
காலறுத்தல் விலைரூபாய் 6-75

வி. பி. பி. செவை பிரத்தியேகம்.

வி. பி. பி; மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்

## சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினால் காலை பல் விளக்கி வந்தால், வாய்நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை

ஏமதுவிலாசம் | நி 3/1 தட்டாதெரு
M 92 | கோட்டைமுனை, மட்டக்களப்பு



திறமான **தேக்க மரங்கள்** பல நீளங்களிலும் | திறமான **குணிமார்க் ஓடுகள்** 13½, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

74 ஆஸ்பத்திரி ரேட்

Std 2 யாழ்ப்பாணம்


## தமிழன் கண்ட ஜப்பான்

1-ம் பக்கத் தொடர்ச்சி

தோக்கியோ நகரம் மிகப் பெரியது. ஜப்பான் தேசத்திற்குத் தலைநகரம். அறுபது லக்ஷம் ஜனங்கள் வரை வசிக்கின்றனர். சிலர் எண்பது லக்ஷம் என்று இராணுவத்தையும் சேர்த்துக் கணக்கிட்டுக் கூறுகின்றனர். ஜின்ஸா அவென்யு என்ற கடைத்தெருவே பல மைல்கள் நீளமுளது: கடையில் உள்ள பொருள்களுக்கு விலைகளைக் குறித்து எழுதியிருக்கிறார்கள். உணவுப் பொருள்கள் பழவகைகள் இவை யாவற்றிற்கும் விலையினை அவையின் தலைகளில் சீட்டு எழுதி வைத்திருக்கிறார்கள். எத்தகைய உணவு தருவர் என்பதற்குமாதிரி அளவு செய்து அதன் விலையையும் அறிவித்துக் கடைகளின் முன்னால் அழகுடன் நிறைவுள்ள கண்ணாடிப் பெட்டிகளில் வெளியிற்செல்லுவோர் எளிதில் அறிந்து கொள்ளுவதற்கு உதவியாக வைத்து இருக்கிறார்கள். "பேரம் பேசுதல்" என்பது கிடையாது.

—ஞானசம்பந்தம்.


L K. S. LEBBAY BROS
GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



இலங்கையின் மிகப் பெரிய

— நகை —

வியாபாரிகள்

= O =

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

ஸ்தாபனம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.


Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannar pannai; Jaffna, on Tuesday November, 20 1951

## ரேடியோ

* இசைத்தட்டு

**திருச்சி புதன் நவம்பர் 21**

காலை 7 10 கீதாரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 உமையாள்புரம் ஜி கல்யாணராமய்யர்பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 நடுத்தரப் பள்ளிகளுக்கு 1 கதம்பம்* 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 கே என் ராதாகிருஷ்ணநாயுடு கிளாரினெட்* 2 தமிழில்செய்தி 2 10 முகம்மது ஷரீப் ஸிதார்* 2 15 உயர்தரப் பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு. 5 30 கும்பகோணம் பி கிருஷ்ணசாமி வயலின் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள்கேட்டவை* 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச் செல்வம் 7 45 செய்திவிளக்கம் 8 பிரியசகோதரி நாடகம் 8 15 கும்பகோணம் பி கிருஷ்ணசாமி வயலின் 8 30 குரல்வகை* 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 உமையாள்புரம் ஜி கல்யாணராமய்யர் பாட்டு 10 முடிவு.

**திருச்சி வியாழன் நவ 22**

காலை 7 10 கீதாரம்பம்* 7 15 தமிழில் செய்தி 7 30 மூவலூர் எஸ் செல்லப்பா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 காலை இசை* 8 30 முடிவு.

12 30 நடுத்தரப்பள்ளிகளுக்கு 1 சித்ரகானம்* 1 15 பெண்ணுலகம் 1 30 இரு குரலிசை * 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 அப்துல் கரீம்கான்* 2 தமிழில்செய்தி 2 10 நாட்டிய சங்கீதம்* 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு 5 30 எஸ் ஞானம்பாள் வீணை 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 ஷான்* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 கிராமகானம்* 7 45 புத்தக விமர்சனம் 8 நாட்டுப்பாடல்கள் 8 15 ராகம் தானம் பல்லவி மதுரை எஸ் சோமசுந்தரம் பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 மூவலூர் எஸ். செல்லப்பா பாட்டு 10 முடிவு.

**திருச்சி வெள்ளி நவ 23**

காலை 7 10 கீதாரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 வாகூர் கே முத்துக்குமாரஸ்வாமி பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 நடுத்தரப்பள்ளிகளுக்கு 1 கதம்பம்* 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 டி டி. செனடையா* வயலின்* 2 தமிழில் செய்தி 2 10 அனுகுல்தாஸ் கோஷ்டி பியானோ* 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு 5 30 என் வைத்தியநாதபிள்ளை என் கோவிந்தசாமிபிள்ளை நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள் கேட்டவை* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 தனிஇடம் கவிதை நாடகம் 7 45 இலக்கியவாசகம் 8 வாகூர் கே முத்துக்குமாரஸ்வாமி பாட்டு 8 30 எம் எஸ் சுப்புலக்ஷ்மி* 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 என் வைத்தியநாதபிள்ளை, என் கோவிந்தசாமிபிள்ளை நாகஸ்வரம் 10 முடிவு


## விளம்பரம்

### காங்கேசன்துறைச் சீமெந்து

சீமெந்து மிகக் கூடுதலாகக் கேட்கப்பட்டு இருப்பதால் இன்று தொடக்கம் திரிகோணமலை மட்டக்களப்புப் புகைவிரதப் பாதை மூலம் எடுப்போருக்கு 2 பெட்டிகள்கொண்ட 20 தொன்னும் மற்றும் ஏனைய புகைரதப் பாதைமூலம் எடுப்போருக்கு 2 பெட்டிகள் கொண்ட 26 தொன்னுமாகக் கொடுக்கப்படும். அதின் மேலதிகமாக ஒரு முறையில் கொடுக்கமுடியாது. பணமும் மேற்கூறிய தொகைக்கு மேலாகக் கட்டினால் ஏற்கப்படமாட்டாது.

R. C. மல்ஹோத்ரா
காங்கேசந்துறை, ஜெனரல் மனேச்சர்
7-11-51. (சீமெந்து)

G. 40 20-11-51.